Madras-Kanyakumari express buses

*286 Q.—THIRU N. DENNIS:
THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to run direct buses between Kanyakumari and Madras; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, 1—7—1973 முதல் சென்னைக்கும் கன்னியாகுமரிக்குமிடையில் மின்னல் வேகப் பேருந்துப் பணியாக (வழித்தட எண் 589) விழுப்புரம், திருச்சி, மேலூர், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோயில் வழியாக இரண்டு பேருந்துகளை ஏற்கனவே இயக்கி வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி: கன்னியாகுமரிக்கும் சென்னைக்கும் இடையே இப்பொழுது விடப்படுகின்ற பஸ்களின் கட்டணம் அதிகமாக இருப்பதனால், அநேகமாக நான்கு, ஐந்து பேர்கள் குறைவாகத்தான் இந்த பஸ்களில் பிரயாணம் செய்கிறார்கள். ஆகவே, இதற்கான கட்டணத்தைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: போதிய வருவாய் இருப்பதாகத் தான் தகவல்.

நடத்துனர் இல்லா விரைவுப் பேருந்துகள்

*287 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, கண்டக்டர் இல்லாமல் நீள்தொலை விரைவுப் பேருந்து ஒன்றைச் சோதனை அடிப்படையில் ஓட்டும் திட்டம் அமலாக்கப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன் முடிவு என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.